இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 15-04-2025

# கொத்தடிமை எடுத்த ‘கொள்கை’ முடிவு!

சில நாட்களாக நிதானம் இல்லாமல் இருந்தார் எடப்பாடி பழனிசாமி. அவரது நடவடிக்கைகள் மர்மமாக இருந்தன. அதை விட அவரது பேச்சுகளும், எதையோ மறைக்கச் செய்யும் செயல்களாகவும் இருந்தன. பா.ஜ.க. தலைமை தன்னை மிரட்டுவதை மறைக்கவே இப்படி எல்லாம் நாடகம் ஆடி இருக்கிறார் பழனிசாமி என்பதை உறுதி செய்து விட்டார் அமித்ஷா.

**பா.ஜ.க. எந்த இரைக்காக காத்திருந்ததோ அந்த இரையாக ஆகிவிட்டார் பழனிசாமி. அவருக்கு வேறு வழியில்லை. அவரது சிக்கல்களை அவரே நன்கு அறிவார். பொதுச் செயலாளர் நாற்காலியில் பழனிசாமி அமர வைக்கப்பட்டாலும், அவர் அனைவராலும் ஏற்கப்பட்ட பொதுச்செயலாளர் அல்ல. அவருக்கு எதிரான ஒரு கூட்டம் அவரைச் சுற்றிலுமே இருந்து கொண்டு இருக்கிறது. பழனிசாமியின் நாற்காலியில் உட்கார அவரைச் சுற்றி இருக்கும் நான்கைந்து பேரே திட்டமிட்டுக் காத்திருக்கிறார்கள். இதில் இரண்டு பேரை பா.ஜ.க. தலைமையே ஊக்கம் கொடுத்து வளர்த்தும் வருகிறது. இது பழனிசாமிக்கு இருக்கும் முதல் சிக்கல்.**

தொடக்கத்தில் இருந்தே சசிகலா, தினகரன், பன்னீர்செல்வம் ஆகிய அணிகளால் நிராகரிக்கப்பட்டவர் பழனிசாமி. முதலில் பழனிசாமியை முதலமைச்சர் ஆக்கியவரே சசிகலாதான். சசிகலா காலை நோக்கி ஊர்ந்து போய் தொட்டு வணங்கினார் பழனிசாமி. அவரே, ‘நீ எனக்கு பதவி வாங்கி கொடுத்தியா? நீ ஏன் அ.தி.மு.க.வுக்கு உரிமை கொண்டாடுற?’ என்று சசிகலாவை ஒருமையில் பொதுக் கூட்டத்தில் பேசினார் பழனிசாமி. கப்பம் கட்டுவதில் தேர்ந்தவர் என்பதால்தான் பழனிசாமிக்கு அந்தப் பதவியையே கொடுத்தார் சசிகலா. மோதல் ஏற்படுவது என்பது வேறு, ஆனால் சசிகலாவையே நீ யார் என்று கேட்கும் அளவுக்கு துரோகியாக மாறினார் பழனிசாமி.

தினகரனுக்காக வாக்குச் சேகரித்தவர்தான் பழனிசாமி. அதன் பிறகு தினகரனை உதாசீனப்படுத்தினார் பழனிசாமி. தன்னை வலிமைப் படுத்திக் கொள்வதற்காக பன்னீர்செல்வத்தை முதலில் சேர்த்துக் கொண்ட பழனிசாமி, அதன்பிறகு அவரையும் தூக்கி எறிந்தார். இவர்கள் அனைவரும், பா.ஜ.க. பக்கமாக இருந்து குடைச்சல் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். **அ.தி.மு.க. பொதுச்செயலாளர் என்று சசிகலாவும் சொல்கிறார். அ.தி.மு.க. என் வசம் இருக்கிறது என்று பன்னீர்செல்வமும் சொல்கிறார். இவை அனைத்தும் இரட்டை இலை சின்னத்துக்கு சிக்கல் ஏற்படுத்துகிறது. அ.தி.மு.க.வை தன் வசம் வைத்திருந்தாலும் இரட்டை இலை சின்னம் கிடைக்காது என்ற சிக்கல் பழனிசாமிக்கு ஏற்பட்டுள்ளது. இது இரண்டாவது சிக்கல் ஆகும்.**

**சசிகலா, தினகரன், பன்னீர்செல்வம் ஆகிய மூவரும் பா.ஜ.க.வின் கஸ்டடியில்தான் இருக்கிறார்கள். இவர்களை அ.தி.மு.க.வுக்குள் சேர்க்கச் சொல்லி பழனிசாமிக்கு நெருக்கடி கொடுக்கிறது பா.ஜ.க. தலைமை. ‘இவர்கள் கட்சிக்குள் வந்தால் தனது தலைமை கேள்விக் குறியாகும்’ என்று பயந்துபோயிருக்கிறார் பழனிசாமி. இது அவருக்கு ஏற்பட்டுள்ள மூன்றாவது சிக்கல்.**

பா.ஜ.க.வுடன் கூட்டுச் சேர்ந்தால் அ.தி.மு.க.வுக்கு இருக்கும் வாக்குகள் கூட விழாது என்பதை அறியாதவர் அல்ல பழனிசாமி. நாடாளுமன்றத் தேர்தலின் போதே டெல்லி சென்று பிரதமர் மோடி அருகில் நின்று கூட்டணியை உறுதி செய்து வந்த பழனிசாமி, தேர்தல் நெருக்கத்தில் பா.ஜ.க.வை கழற்றி விட்டார். எனவே, பழனிசாமியை பா.ஜ.க. தலைமை நம்பத் தயாராக இல்லை. கடிவாளம் போட்டு கட்டிப் போடத் திட்டமிட்டு தனது வழக்கமான ரெய்டு பாணியைக் கையில் எடுத்தது பா.ஜ.க..

கடந்த ஜனவரி மாதம் ரெய்டு அஸ்திரத்தை பா.ஜ.க. எடுத்தது. பழனிசாமியின் உறவினர்களுக்குச் சொந்தமான 26 இடங்களில் ரெய்டு நடந்தது. ‘எடப்பாடிக்கு செக் உறவினர் வீட்டில் தொடரும் ஐ.டி. ரெய்டு’, ‘எடப்பாடி பழனிசாமியின் உறவினர் வீட்டில் ஐந்தாவது நாளாக வருமான வரித்துறை ரெய்டு’, ‘எடப்பாடி உறவினர் வீட்டில் இறங்கிய ஐ.டி. அதிகாரிகள்’, ‘எடப்பாடி உறவினர் வீட்டில் விடிய விடிய ரெய்டு’, ‘கூட்டணிக்கு குறி வைக்கப்படுகிறாரா எடப்பாடி?’, ‘வசமாக சிக்கிய எடப்பாடி பழனிசாமியின் உறவினர்’, ‘எடப்பாடி பழனிசாமியின் உறவினர் வீட்டில் சிக்கியது என்ன?’, ‘750 கோடி வரி ஏய்ப்பு செய்த எடப்பாடியின் உறவினர்’, ‘உறவினரின் வரி ஏய்ப்பு எடப்பாடிக்கு சிக்கல்’, என்று ஊடகங்கள் அனைத்தும் செய்தி வெளியிட்டன. ‘முதலுக்கே மோசம் வந்துவிட்டது’ பழனிசாமிக்கு. **இதுதான் அவரை பா.ஜ.க.வை நோக்கி பணிய வைத்துள்ளது.**

‘இந்த ரெய்டுகள் அனைத்தும் அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைப்பதற்கான பா.ஜ.க.வின் அழுத்தங்கள் ஆகும்’ என்று அனைத்து ஊடகங்களும் எழுதியது. ரெய்டு நடந்த காலக்கட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்றம் நடந்து கொண்டிருந்தது. அப்போது சட்டமன்றத்துக்கு வராமல் வீட்டில் முடங்கிக் கிடந்தார் பழனிசாமி. இதில் இருந்து தப்புவதற்காகத்தான் பா.ஜ.க.வின் மடியில் தஞ்சம் அடைய வேண்டிய நெருக்கடி பழனிசாமிக்கு வந்தது. மிகப்பெரிய பிரச்சினை என்பது இதுதான்.

**தனது தலைமைக்கும் பிரச்சினை. தனது இருப்புக்கும் பிரச்சினை. இரட்டை இலைக்கும் பிரச்சினை. தனது குடும்பத்துக்கும் பிரச்சினை. தனது சொத்துக்கும் பிரச்சினை. பாவம் பழனிசாமி என்ன செய்வார். கொத்தடிமையாய் இருக்க, கோடிக்கணக்கான அ.தி.மு.க. தொண்டர்களை அடமானம் வைத்துவிட்டார். அதனைத்தான் அறிவிக்க வந்தார் அமித்ஷா.**

**‘கூட்டணிக்கும் கொள்கைக்கும் எந்த சம்பந்தமும் இல்லீங்க’ என்பது பழனிசாமியின் அரியவகை அரசியல் தத்துவம் ஆகும். அதற்கு அவரே சாட்சியாகவும் ஆகிவிட்டது. சொன்னது போல நடப்பதுதான் அவரது வழக்கம்.**



புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், கூடலூரில் நடைபெற்ற “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாமில், அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, முனைவர் கோவி.செழியன், சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில் 12.4.2025 அன்று மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை பார்வையிட்டு, மக்களிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்து, பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ. ராஜராஜன், தஞ்சாவூர் மாநகராட்சி துணை மேயர் மரு.அஞ்சுகம்பூபதி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) திருமதி.அ.ஷோபா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## அனைத்து ராஜதந்திரங்களையும் தெரிந்தவர் முதல்வர்!

# தமிழ்நாட்டில் அமித்ஷாவால் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாது!

## புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, ஏப். 15 -

புதுக்கோட்டை மாநகராட்சிக்கு உட்பட்ட ஓட்டகுளத்தை சுமார் ஒன்பது புள்ளி அஞ்சு கோடி ரூபாய் மதிப்பில் தூர் வாரும் பணி தொடங்கப்பட்டது.

இதற்கான பணியை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி மற்றும் பிற்படுத்தப்பட்ட நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் எஸ்.ரகுபதி,

இந்திய அரசியலிலே ஜனநாயகத்திற்கு கிடைத்துள்ள மிகப்பெரிய வெற்றி, ஆளுநருக்கு கால நிர்ணயம் மட்டுமே இருந்தது, ஒரு மாத கால அவகாசம் மட்டுமே உள்ளது.

ஆளுநர் நினைத்தால் அவர் இதுவரைக்கும் ராஜினாமா செய்து இருக்கலாம், மத்திய அரசு நினைத்தால்



அவரை திரும்ப அழைத்து இருக்கலாம், இனி அவர் பதவியில் இருந்தாலும் எங்களுக்கு கவலையில்லை ஏனென்றால் இனி சட்ட மசோதாவிற்கு காலம் தாழ்த்த முடியாது.

தி.மு.க.வின் மூத்த அமைச்சர்கள் வேண்டுமென்றே உள்நோக்கத்தோடு எந்த கருத்தையும் பேசுவதில்லை, பேசிக் கொண்டிருக்கும்போது நாக்கு தவறி சில வார்த்தைகளை கூறி விடுகின்றனர்,

அதற்கு முதலமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார், மூத்த அமைச்சர்கள் குறித்து கருத்து கூற எனக்கு உரிமை இல்லை,

பொன்முடி அமைச்சர் பதிவியில் இருப்பது குறித்தும் அவரை நீக்குவது குறித்தும் முதலமைச்சர் தான் முடிவு எடுப்பார்.

அமித்ஷா சாணக்கியராக இருக்கலாம் ஆனால் தமிழக முதல்வர் அனைத்து ராஜதந்திரங்களையும் தெரிந்த வர் அமித்ஷாவால் தமிழகத்தில் எந்த விதமான தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாது.

தி.மு.க. கூட்டணியை விட்டு எந்த கட்சியும் போகாது.

பா.ம.க. கூட்டணி குறித்த கேள்விக்கு அமைச்சர் ரகுபதி பதில் கூறுகையில்,

புதிய கட்சி சேர்க்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் கூட்டணி கட்சிகளில் கலந்து ஆலோசித்து அதன் பின்னர் அவர்களின் சம்மதத்தின் பேரில் தி.மு.க. கூட்டணிக்கு அவர்களை தமிழக முதல்வர் இணைத்துக் கொள்வார்.

காங்கிரஸ் கம்யூனிஸ்ட் ஆகிய கட்சியுடன் கொஞ்சிக் குலாவி வரும் முதலமைச்சர் முல்லைப் பெரியாறு மற்றும் மேகதாது அணை குறித்து எந்த விதமான பேச்சுவார்த்தையையும் முதல்வர் ஏன் நடத்தவில்லை என்று எடப்பாடி கூறியுள்ளது குறித்த கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர் ரகுபதி,

பா.ஜ.க. உடன் கூட்டணியிலிருந்து கொண்டு நான்கு ஆண்டு காலம் அவர்களுடன் கொஞ்சி குலாவி அவர்கள் கூறுவதற்கெல்லாம் தலையாட்டி கொண்டிருந்த அ.தி.மு.க. ஏன் அப்போது இதுகுறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று நாங்கள் கேட்கலாம் அல்லவா ?. அமித்ஷா வருகை என்பது அவருடைய கட்சி விவகாரம் எங்களை பொறுத்த வரை நாங்கள் தெளிவாக உள்ளோம். எங்கள் கூட்டணி வலுவான கூட்டணி.

இவ்வளவு பிரச்சினைக்கு பிறகும் ஆளுநர் ஒன்று ராஜினாமா செய்திருக்க வேண்டும் இல்லை என்றால் ஒன்றிய அரசு அவரை திரும்ப பெற்று இருக்க வேண்டும்.

அவர் இருந்தாலும் சரி புதியவரை போட்டாலும் சரி எங்களுக்கு கவலை இல்லை. நாங்கள் நிறைவேற்றி அனுப்பும் மசோதாக்கள் இனி காலதாமதம் இல்லாமல் உச்சநீதிமன்ற தீர்ப்புப்படி ஒப்புதல் பெறப்படும்.

ஒன்றிய அரசு தமிழகத்திற்கு நிதியை அள்ளிக் கொடுக்கவில்லை, கிள்ளி தான் கொடுத்துள்ளது.

கொடுத்ததை கூறும் அவர்கள் எவ்வளவு தமிழகத்திலிருந்து நிதியை பெற்றுள்ளார்கள் என்பது குறித்து தெளிவுபடுத்த வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

## இராயபுரம் 49-வது வட்டத்தில் தண்ணீர் பந்தல்!

சென்னை, ஏப். 15 -

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்குப் பகுதி 49-வது வட்டக்கழகம் சார்பில் சோலையப்பன் தெரு, அரசு மருத்துவமனை அருகில் வட்ட கழகப் பொறுப்பாளர் க.கலைசெல்வன் ஏற்பாட்டில் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரிம் இரா மூர்த்தி, இராயபுரம் கிழக்குப் பகுதி செயலாளர் இரா. செந்தில்குமார், பொதுக் குழு உறுப்பினர் வே.சிவகுமார், முன்னாள் வட்டச் செயலாளர் எல்.சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர், எம்.எல்.ஏ. தண்ணீர் பந்தல் திறந்து வைத்து பொதுமக்களுக்கு இளநீர், மோர், ரோஸ்மில்க், தர்பூசணி உள்ளிட்ட பழங்களை வழங்கினார்.

இதில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் பி.டி.பாண்டி செல்லம், மாநில வழக்கறிஞர் துணை செயலாளர் மருது கணேஷ், க.நாகம்மை, த.ஜெயபாலன், பி.சேகர், கு.சுந்தர், கட்பிஸ் ப.சோமசுந்தரமூர்த்தி, பொன் லட்சுமி, வழக்கறிஞர் மதனராஜ், ஏ.வேணுகோபால், என்.எழுமலை. சி.லிங்கேசன், சேகரன், சி.மனோகரன், வி.கலைச்செல்வன் மற்றும் வட்டகழக நிர்வாகிகள் எம்.பழனி, எம்.வி.நரசுமணி, அ.குமார், கே.ஆர்.கோபிநாத், ஜி.கோதண்டன், த.கு. பன்னீர்செல்வம், ஏ.கதி ரவன், ப.சுதாகர், கே.பாஸ்கர்,

ஆர்.பாரதி, ஜீ.விநாயகம், எஸ்.சங்கர், அரசு, கே. பாலகிருஷ்ணன், எம்.தங்கராஜ், ஆர்.எம்.ராமமூர்த்தி, கன்னியப்பன், வி.சின்னசாமி, ஜி.ரேவதி, மோகனசுந்தரம் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

